People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**20.02.2009**

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## இவ்வாரத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 04 |
| 2. | பெண்கள் மீதான வன்முறை | 117 |
| 3. | காவல் நிலையச் சித்திரவதை | 14 |
| 4. | வகுப்பறை வன்முறை | 11 |
| 5. | தலித்துகள் மீதான வன்முறை | 17 |
| 6. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 07 |
| 7. | மருத்துவர்கள் அலட்சியம் | 52 |
| 8. | கொத்தடிமை | 03 |
| 9. | பெண் சிசு கொலை | 19 |
| 10. | குழநதை திருமணம் | 02 |
| 11. | குழந்தை தொழிலாளர் மீட்பு | 02 |
| 12. | மீனவர்கள் மீது தாக்குதல் | 02 |
| 13. | கந்து வட்டிக் கொடுமை | 04 |
| 14. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | 02 |
| 15. | ரேசன் அரிசி கடத்தல் | 05 |
| 16. | பொதுவானவை | 13 |
| 17. | மொத்தம் | 210 |

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்
1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-01
## 01.01.2009 முதல் 31.01.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1. | 01.01.2009 | **இராமநாதபுரம் மாவட்டம்** ராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்க சென்ற நாட்டுபடகு மீனவர்களை நிர்வாணப்படுத்தி தாக்கிய இலங்கை கடற்படையினர். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 2. | 01.01.2009 | **மதுரை மாவட்டம்** மதுரை டோக் நகரைச் சேர்ந்தவர் ஜெயப்பிரகாஷ். இவர் நகை அடகுகடை வைத்துள்ளார். தராசு படிகற்களில் முத்திரை வைப்பதற்கு நரிமேடு முத்திரை ஆய்வாளர்யை அணுகியபோது செல்லத்துரை 200 ரூபாய் லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்பு துறை காவலர்களால் கைது செய்யப்பட்டார். | லஞ்சம் | தமிழ் ஓசை |
| 3. | 01.01.2009 | **மதுரை மாவட்டம்** சமயநல்லூர் வைகை நகர் போஸ் காம்பவுண்ட்டை சேர்ந்தவர் சந்திரபோஸ் (55) இருவருக்கும் திருப்பாசேதியைச் சேர்ந்த பூமிநாதன் என்பவரது மகள் தனலட்சுமி (28) கடந்த 9 வருடத்திற்கு முன்பு திருமணம் நடந்தது. இவர்களுக்கு 8 வயதில் ஒரு மகனும் 6 வயதில் ஒரு மகனும் உள்ளனர். கணவன் மனைவி இடையே ஏற்பட்ட பிரச்சனையால் தனலட்சுமி தூக்குப் போட்டு தற்கொலை செய்துக் கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 4. | 03.01.2008 | **புதுக்கோட்டை மாவட்டம்** இலுப்பூரைச் சேர்ந்த வில்லியம் சேவியர் (27), இவரதுமனைவி சந்தான செல்வி (21). இவருக்கு திருமணமாகி ஒரு குழந்தையுள்ளது. தற்போது நான்கு மாத கர்ப்பிணியாகவும் இருந்தார். இவருக்கு திருமணத்தின் போது 20 சவரன் நகை 50 ஆயிரம் ரொக்கம் மற்றும் சீர்வரிசைகள் செய்திருந்தனர். மேலும் 20 சவரன் நகை பணம் கேட்டு சித்திரவதை செய்தது மட்டுமல்ல சந்தானசெல்வி உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி கொண்டார். இதுகுறித்து இலுப்பூர் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 5. | 03.01.2008 | **தூத்துக்குடி மாவட்டம்** ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்ந்த மாரியப்பன் (25) மனைவி சிவசங்கரி (20). திருமணமாகி இரண்டு ஆண்டு ஆகிறது. அரசு வங்கி தேர்வுக்கு விண்ணப்பிக்க பக்கத்து வீட்டுகாரரிடம் 200 ரூபாய் வாங்கி கொடுக்குமாறு மனைவி சிவசங்கரியிடம் வலியுறுத்தியுள்ளார். அதற்கு அவர் மறுக்கவே ஆத்திரம் அடைந்த மாரியப்பன் சிவசக்தியை கொலை செய்தார். இதுகுறித்து ஸ்ரீவைகுண்டம் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 6. | 03.01.2008 | **தேனி மாவட்டம்** தேனி மாவட்டம் போடி வட்டம், மினாட்சி சிற்றூரைச் சேர்ந்தவர் ஒச்சு (28). இவரது மனைவி பானுமதி. பானுமதி வரதட்சணை வாங்கி வராததன் காரணமாக ஒச்சு பானமதியின் மீது | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் ஓசை |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மண்ணெண்ணெய் ஊற்றி கொல்ல முயன்றுள்ளார். இதுகுறித்து போடி புறநகர் காவல் நிலையத்தில் புகார். | | |
| 7. | 03.01.2008 | **கோவை மாவட்டம்** தன்தொழில் தொடங்க சான்றிதழ் தருவதற்கு 1000 ரூபாய் கையூட்டு கேட்ட காவல் துறை அதிகாரி சுகுமாரை நடுவர் புலனாய்வு பிரிவினர் கைது செய்தனர். | லஞ்சம் | தமிழ் ஓசை |
| 8. | 03.01.2008 | **ராமநாதபுரம் மாவட்டம்** ராமநாதபுரம் நகராட்சி துணைத்தலைவர் தேர்தலில் திமுக பிரிவைச் சேர்ந்த கணவள்ளி மற்றும் ராஜா உசேன் பிரிவினரிடையே மோதல் ஏற்பட்டது. மோதலைத் தடுக்க போலீசார் தடியடி நடத்தினர். | போலீஸ் தடியடி | |
| 9. | 03.01.2008 | **ராமநாதபுரம் மாவட்டம்** கீழக்கரையை அடுத்துள்ள ஏர்வாடி தர்கா பகுதியில் காதர் பாட்சா மனைவி தாஜீன்னிசாவை (24) ஈவ்டீசிங் செய்ததாக அதே பகுதியைச் சேர்ந்த குமாரை (25) என்பவரை கைது செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை. | |
| 10. | 03.01.2008 | **சென்னை மாவட்டம்** மாங்காடு அடுத்த கேலிவாக்கத்தைச் சேர்ந்தவர் செல்வன் (35). விமான நிலையத்தில் சுமை தூக்கும் தொழிலாளர். இவர்மனைவி காமாட்சி (30). செல்வன் மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு மண்ணெண்ணெய் ஊற்றி கொல்ல முயற்சி. இதுகுறித்து மாங்காடு போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | இணைய தளம் |
| 11. | 03.01.2008 | **கோவை மாவட்டம்** ஆனைமலையில் உள்ள ஒரு வீதியில் கடந்த 31 ஆம் தேதி இரவு 13 வயது சிறுமி கோலம் போட்டு கொண்டிருந்தார். சிறுமியை ஜமால் என்பவரின் மகன் அஷ்ரப் (15) குடிபோதையில் சிறுமியை வலுகட்டாயமாக தூக்கிச் சென்று மானபங்கம் செய்ய முயன்றார். இதுகுறித்து ஆனைமலை போலீசார் வழக்கு பதிவு | பெண்களுக்கு எதிரான வன்முறை | இணைய தளம் |
| 12. | 03.01.2008 | **கோவை மாவட்டம்** வால்பாறை அடுத்த சக்தி எஸ்டேட் பகுதியில் நீரோடையில் நீர் குடித்த 11 பேர் வாந்தி மயக்கம் ஏற்பட்டு வால்பாறை அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவமனையில் அனுமதி. | சுகாதார கேடு | இணைய தளம் |
| 13. | 04.01.2009 | **நெல்லை மாவட்டம்** பாளையங்கோட்டை சிவன்கோவில் அருகே உள்ள விசுவ பிராமணர் ரெுவைச் சேர்ந்தவர் கோபால் ஆசாரி (30). இவர் மற்றும் இவரது குடும்பத்தினர் 6 பேர் கடன் தொல்லை தாங்காமல் சையணைடு சாப்பிட்டு தற்கொலை செய்துக் கொண்டனர். இதுகுறித்து பாளை போலீசில் புகார். | கந்து வட்டிக் கொடுமை. | தினத்தந் தி |
| 14. | 04.01.2009 | **மதுரை மாவட்டம்** சோழவந்தான் போலீசார் நடத்திய சோதனையில் நெல் பேட்டைக்குள் ரேசன் அரிசி கடத்தி வந்த லாரி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல். | தினத்தந் தி |
| 15. | 04.01.2009 | **மதுரை மாவட்டம்** உசிலம்பட்டி தாலுகா ஆரியப்பட்டியைச் சேர்ந்தவர் ஈஸ்வரன். இவரது மனைவி பஞ்சவர்ணம். இவர்கள் மேலபட்டி அங்குசாமி என்பவரின் செங்கல் சூளையில் வேலைக்கு வரமறுத்த கணவன் மனைவியை கொடுமையாக தாக்கியுள்ளார். | கொத்தடிமை | தினத்தந் தி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | இதுகுறித்து மதுரை டிஜிபி மற்றும் பலர் போலீஸ் அதிகாரிகளிடம் புகார். | | |
| 16. | 04.01.2009 | **தூத்துக்குடி மாவட்டம்** திருவைக்குண்டத்தை அடுத்த ஏரல் அருகே உள்ள கணபதி சமுத்திரத்நதைச் சேர்ந்தவர் பால்ராசு. இவரின் மகள் சந்தனமாரி (18). இவர் தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வந்தார். இவருக்கு இவரது பெற்றோர் திருமணம் செய்து வைக்க முடிவு செய்தார். திருமணத்தில் விருப்பம் இல்லாததால் சந்தனமாரி விசமருந்தி தற்கொலை செய்துக் கொண்டார். இதுகுறித்து ஏரல் காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை. | தமிழ்ஓசை |
| 17. | 04.01.2009 | **இராமநாதபுரம் மாவட்டம்** இராமேஸ்வரத்தில் ஜார்கண்ட் பகுதியைச் சேர்ந்த 18 வயது பெண் தன் உறவினர்களுடன் குளித்துக் கொண்டிருக்கும் போது கப்பல் படையைச் சேர்ந்தவர் அப்பெண்ணிடம் தவறாக நடந்துக் கொண்டார். இதுகுறித்து இராமேஸ்வரம் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை. | Indian Express |
| 18. | 05.01.2009 | **திருநெல்வேலி மாவட்டம்** நாட்டார்பட்டி அருகே சென்றுக் கொண்டிருந்த மணல் பாவூர் சத்திரம் காவல் துறையிளர் மடக்கி ஆய்வு செய்தனர். அந்தச் சரக்குந்தில் மணல் ஏற்றி வந்தது தெரியவந்தது. காவல்துறையினர் சரக்குந்தைப் பறிமுதல். | மணல் கடத்தல் | |
| 19. | 05.01.2009 | **திண்டுக்கல் மாவட்டம்** வேடசந்தூர் அடுத்த வல்லநத்தம் புதூரைச் சோந்தவர் தண்டபாணி. கொலை வழக்குத் தொடர்பாக மதுரை நடுவண் சிறையில் அடைக்கப்பட்ட இவர் உடல் தேய்வு நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். மதுரை அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மருத்துவம் பெற்று வந்த இவர் நேற்று முன்நாள் இரவு இறந்தார். மருத்துவமனையில் காவல் துறையினர் விசாரித்து வருகின்றனர். | சிறைச்சாலை மரணம் | |
| 20. | 05.01.2009 | **சென்னை மாவட்டம்** சென்னை அருகே உள்ள ஒரு தனியார் பொறியியல் கல்லூரி மாணவி காயத்திரி அந்த கல்லூரியில் பயின்று வந்த பிரவின் என்ற மாணவன் கேலி கிண்டல் செய்துள்ளனர். காயத்திரி கணவர் தன் நண்பர்கள் 3 பேருடன் சேர்ந்து பிரவினை தாக்கியுன்னார். இதுகுறித்து சோலையூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 21. | 05.01.2009 | **விருதுநகர் மாவட்டம்** சிவகாசி ஜவுளிக்கடை தெருவைச் சேர்ந்தவர் முருகானந்தம் மகன் விக்னேஷ் (11). காமராஜர் ரோட்டில் உள்ள முஸ்லிம் மேல்நிலைப்பள்ளியில் 6 ஆம் வகுப்பு படித்துவந்தார். அரையாண்டு தேர்வில் மதிப்பெண் குறைந்ததால் மனமுடைந்த மாணவன் கிணற்றில் குதித்து தற்கொலை செய்துக் கொண்டார். இதுகுறித்து சிவகாசி காவல் நிலையத்தில் புகார். | வகுப்பறை வன்முறை | |
| 22. | 05.01.2009 | **மதுரை மாவட்டம்** கருப்பாயூரணி அருகே கருப்புக்கல் பகுதியைச் சேர்ந்தவர் பாண்டிசந்திரன் | பெண்களுக்கு எதிரான | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | இவரது பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர் மலைச்சாமி கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு அந்த பகுதியில் உள்ள பொது குழாயில் தண்ணீர் பிடிப்பதில் தகராறு மலைசாமி மற்றும் அவரது மனைவி மணியம்மாள் ஆகியோரை அரிவாளால் தாக்கப்பட்டனர். இதுகுறித்து ஒத்தக்கடை போலீசில் புகார். | வன்முறை | |
| 23. | 05.01.2009 | **திண்டுக்கல் மாவட்டம்** ரெட்டியார்சத்திரம் அரகே எல்லைப்பட்டி இந்த ஊரைச் சேர்ந்த பெரியசாமி மகன் ஈஸ்வரன் (33). லாரி டிரைவராக உள்ளார். இவருக்கும் கன்னியவாடி அருகே கசவனம்பட்டியைச் சேர்ந்த கணபதி மகள் ஜெயலட்சுமிக்கும் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பிறகு பெரியசாமி மற்றும் அவரது குடும்பத்தினர் ஜெயலட்சுமி வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தி வந்துள்ளனர். இதுகுறித்து ஒட்டன்சத்திரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 24. | 05.01.2009 | **கடலூர் மாவட்டம்** கடலூர் மாவட்டம் கீழக்கரை கிராமத்தைச் சேர்ந்தவர் புலவேந்திரன். இவரது மனைவி கண்ணகி நிறைமாத கர்பிணியாக இருந்த இவருக்கு சனிக்கிழமை இரவு பிரசவ வலி ஏற்பட்டு உடனடியாக அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உறவினர்கள் சேர்த்தனர். அங்கிருந்த நர்சுகள் வயிற்றில் குழந்தை மாறி கிடக்கிறது எனக் கூறி காலம் கடத்தி உள்ளனர். டாக்டர்கள் அலைகழித்த நிலையில் ஆம்புலன்ஸ் வேனில் பிரசவம் நடந்தது. | பெண்களுக்கு எதிரான வன்முறை. மருத்துவர்கள் அலட்சியம். | |
| 25. | 05.01.2009 | **சென்னை மாவட்டம்** தாம்பரத்தைச் சேர்ந்தவர் முகமது அஸ்லாம். இவரது மனைவி ரியானா இவர்களுக்கு 89 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. திருமணமான 3 வது மாதத்திலேயே திருமணமானதை மறைத்து மோகனா (எ) மல்லிகா (60) 2வது முறை முகமது அஸ்லாம் பதிவு திருமணம் செய்துக் கொண்டார். நீதிமன்ற உத்திரவின் படி ஜீவனாம்சம் பணம் கேட்க சென்ற 2 வது மனைவி மோகனாவை வீட்டில் பூட்டி வைத்துள்ளார். இதுகுறித்து தாம்பரம் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 26. | 05.01.2009 | **ஈரோடு மாவட்டம்** புளியம்பட்டி அருகே உயிலம் பாளையத்தில் பொது கிணறு ஒன்றில் பச்சிளம் குழந்தையை கிணற்றில் வீசி கொலை. கொலை செய்தவர்களை புளியம்பட்டி போலீசார் தேடி வருகின்றனர். | சிசுக் கொலை | |
| 27. | 05.01.2009 | **கோவை மாவட்டம்** குனியமுத்தூர் திருநாவுக்கரசு நகரைச் சேர்ந்தவர் வேலுச்சாமி. இவரது மகள் சரவணன் (32). இவருக்கும் மதுக்கரை ரோடு ரயில்வே கேட்ட பகுதியைச் சேர்ந்த பார்வதிக்கும் (23), 2005 ஆம் ஆண்டு திருமணம் நடந்து. சரவணனின் குடும்பத்தினர் மேலும் 20 பவுன் நகை வாங்கி வருமாறு துன்புறுத்திகிறார் என அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 28. | 05.01.2009 | **ஈரோடு மாவட்டம்** பங்களாபுதூர் அருகே கே. என். பாளையம் பெரியசாமி கோவில் வீதியைச் சேர்ந்தவர் பிரபா (23). இவர் கடந்த 6 ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடந்தது. கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையில் பிரபா தற்கொலை செய்துக் கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 29. | 05.01.2009 | **தேனி மாவட்டம்** அல்லிநகரம் கக்கன்ஜி காலனியைச் சேர்ந்தவர் மணிமாறன் (35). மீன் வியாபாரி. இவரது மனைவி போதுமணி. தன் மகள்களுக்கு காதணி வைப்பதில் ஏற்பட்ட பிரச்சனையில் மனைவியை மண்ணெண்ணெய் ஊற்றிக் கொல்ல முயன்றார். இதுகுறித்து அல்லிநகரம் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 30. | 05.01.2009 | **தேனி மாவட்டம்** தேவாரம் அருகே செல்லாயிபுரத்தைச் சேர்ந்தவர் கணேசன் (30). இவருக்கும் ராஜேஸ்வரி என்ற பெண்ணுக்கும் திருமணமாகி விவாகரத்து ஆகிவிட்டது. இரு ஆண்டு முன் மகாலிங்கபுரத்தைச் சேர்ந்த கலா அமுதம் (26)என்பவரை திருமணம் செய்துக் கொண்டார். கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக கலாஅமுதம் மர்மமான முறையில் இறந்துகிடந்தார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 31. | 06.01.2009 | **மதுரை மாவட்டம்** நேதாஜி ரோடு அயோத்திக் கோயில் சந்தில் வசிப்பவர் ராஜேந்திரன். இவரது மகள் நிவேதிதா. இவர் அரையாண்டு தேர்வில் மதிப்பெண் குறைந்ததால் மனமுடைந்து தற்கொலை செய்துக் கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 32. | 06.01.2009 | **தூத்துக்குடி மாவட்டம்** கோவில்பட்டி அடுத்த வானரமுட்டி இராமலிங்கபுரத்தைச் சேர்ந்தவர் சின்னசுப்பையா மகள் முனியசாமி. இவர் தனியார் மீன் ஆக்க நிலையத்தில் வேலைபார்த்து வந்தார். இவர் ஊதியம் பெறுவதற்காக அதே பகுதியில் உள்ள கந்தசாமி ஆனந்தராசு, ரவி சாதிய ரீதியாக தரக்குறைவாக பேசியுள்ளார். இதுகுறித்து மதுரை உயர் நீதிமன்றம் 5 பேர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவுசெய்ய உத்தரவிட்டுள்ளது. | தலித்களுக்கு எதிரான வன்முறை | |
| 33. | 06.01.2009 | **சேலம் மாவட்டம்** கோரிமேடு பகுதி அருகே வசிப்பவர் காமராஜ் தனியார் நிறுவனம் ஒன்றில் மேலாளராக உள்ளார். இவரது மகள் கிரேஸி. இவர் சில தினங்களாக பள்ளிக்குச் செல்லாததால் பள்ளிமுதல்வர் எஸ்தர் கிருபாரன் பிரம்பால் அடித்த சம்பவம். இதுகுறித்து சேலம் போலீசில் புகார். | வகுப்பறை வன்முறை | |
| 34. | 06.01.2009 | **புதுக்கோட்டை மாவட்டம்** பொன்னமராவதியை அடுத்த அவகுப்பட்டி ஊராட்சி உள்ள ரனமேடு என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் முருகேசன் (40). இவரது மனைவி சுமதியுடன் ஏற்பட்ட குடும்பத்தகராறின் காரணமாக மனைவி, மகள் தாயைக் கொலை செய்து விட்டு தானும் தற்கொலை செய்துக் கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 35. | 07.01.2009 | **சேலம் மாவட்டம்** பணமரத்துப்பட்டியில் செயல்பட்டு வரும் தனியார் மெட்ரிக்குலேசன் பள்ளியில் சேலம் ஏற்காடு அடிவாரத்தைச் சேர்ந்த காமராஜ் மகன் கிரேசி பத்தாம் வகுப்பு படிக்கிறார். இவர் பள்ளிக்கு ஒழுங்காக வராததைக் கண்டித்து பள்ளி முதல்வர் எஸ்தர் கிருபாகரன் பிரம்பால் அடித்துள்ளார். இதுகுறித்து பனமரத்துப்பட்டி காவல்துறையில் புகார். | வகுப்பறை வன்முறை | |
| 36. | 07.01.2009 | **மதுரை மாவட்டம்** மேலூர் வட்டம் ஆண்டிபட்டி விலக்கு ஸ்டாப்பில் பஸ்கள் நிறுத்தாததைக் கண்டித்து கிராமமக்கள் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். பஸ்கள் நிற்காததால் பள்ளி மாணவர்கள் பள்ளிக்கு நடந்தே செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. | பொது பிரச்சனை | |
| 37. | 07.01.2009 | **மதுரை மாவட்டம்** மதுரை அரசு மருத்துவமனையில் பிரசவ வார்டில் லஞ்சம் கேட்டதால் நோயாளிகளின் உறவினர்களுக்கும் ஊழியர்களுக்குமிடையே மோதல் ஏற்படும் சூழ்நிலை. | லஞ்சம் | |
| 38. | 07.01.2009 | **மதுரை மாவட்டம்** மதுரை முல்லை நகரைச் சேர்ந்தவர் சுரேஷ். சலவைத் தொழிலாளி. இவரது மனைவி சித்ரா (21). இவர்களுக்கு திருமணம் ஆகி 3 ஆண்டுகள் ஆகிறது. குழந்தைகள் இல்லை என்ற காரணத்தால் மனம் நொந்து தற்கொலை செய்துக்கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 39. | 08.01.2009 | **விருதுநகர் மாவட்டம்** இராசபாளையம் அருகே கணபதி சுந்தரநாச்சியாபுரத்தைச் சேர்ந்தவர் ஸ்ரீராம் (31). இராசபாளையத்தில் உள்ள தனியார் (கொரியர்) நிறுவனத்தில் வேலை பார்க்கிறார். இவரது மனைவி அழகு லட்சுமி (26). தனியர் நூற்பாலையில் வேலை செய்து வந்தார். ஸ்ரீராமின் அண்ணன் இராமசுந்தரம் தம்பியிடம் அடிக்கடி செலவுக்கு பணம் பெற்று சென்றுள்ளார். இதனை கண்டித்த அழகுலட்சுமியை இராமசுந்தரம் அரிவாளால் வெட்டி கொலை செய்தார். இதுகுறித்து சேத்தூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 40. | 08.01.2009 | **புதுவை மாநிலம்** புதுவை மாநிலம் மகின்ஷா(18). புதுவை பாரதியார் பொறியியல் தொழில் நுட்பக் கல்லூரியில் மெக்கானிக்கல் பொறியில் பிரிவில் முதலாம் ஆண்டில் படித்து வருகிறார். இவரை அந்த கல்லூரியில் பயிலும் முதுநிலைய மாணவர்கள் 4 பேர் புத்தாண்டு கொண்டாட பணம் தராததால் சூடான சலவைக் கருவியை வயிற்றில் வைத்து சித்திரவதை செய்துள்ளார். | கல்லூரி வன்முறை | |
| 41. | 08.01.2009 | **திண்டுக்கல் மாவட்டம்** கொடைக்கானல் வட்டக்கானல் ரோட்டைச் சேர்ந்த ஓவியர் எட்வின் ஜோசப். இவரை கொடைக்கானல் போலீசார் சந்திரன், மாரியப்பன் ஆகியோர் இவரது வீட்டில் அத்துமீறி நுழைந்து ஓவியங்களை சேதப்படுத்தியதும் அல்லாமல் இவர் மீது கஞ்சா வழக்கு போட்டுள்ளதாக மதுரை ஐகோர்ட்டில் புகார். புகாரை விசாரிக்க எஸ்.பி க்கு ஐகோர்ட் உத்தரவு. | காவல் நிலையச் சித்திரவதை. | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 42. | 08.01.2009 | **சேலம் மாவட்டம்** ஸ்ரீபெரும்புதூர் அடுத்த கொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர் பூபாலன் (50). விவசாயி. இவரது மனைவி யசோதா (35). இவரது இருதய சிகிச்சைக்கு முதல்வர் நிதியிலிருந்து உதவி பெறுவதற்கு ஜாதி சான்றிதழ் போன்ற சான்றிதழ்களுக்கு கிராம நிர்வாக அலுவலர் ராதாகிருஷ்ணன் (45) 500 ரூபாய் லஞ்சம் வாங்கியதாக புகார். | லஞ்சம் | |
| 43. | 08.01.2009 | **மதுரை மாவட்டம்** தேனி மாவட்டம் ஆண்டிபட்டி , பாலாஜி நகரைச் சேர்ந்தவர் ரங்கம்மாள் (85). இவரது கணவர் குருசாமி இருவரும் சுதந்திர போராட்ட தியாகிகள் ஆவார்கள். கியாஸ் சிலிண்டர் விநியோக உரிமை கேட்ட போது சுதந்திர போராட்ட தியாகியான இவரைஅதிகாரிகள் இழிவுபடுத்தி விட்டதாக இவரை அதிகாரிகள் இழிவு படுத்தி விட்டதாக இவர் மதுரை ஐகோர்ட்ட கிளையில் புகார். | லஞ்சம் | |
| 44. | 08.01.2009 | **வேலூர் மாவட்டம்** காட்பாடி அடுத்த காங்கேயநல்லூரில் ஒரே நாளில் பலருக்கு வாந்தி பேதி ஏற்பட்டது. பாதிக்கப்பட்வர்களில் வேலாளர் தெருவைச் சேர்ந்தவர் பீதாம்பரம் மனைவி மனோகரி (34) என்பவர் இறந்தார். | சுகாதார கேடு | |
| 45. | 08.01.2009 | **நாகை மாவட்டம்** மயிலாடுதுறை துறைநாடு எம்.ஜி.ஆர் காலனி பகுதியில் மிகவும் பிற்படுத்தபட்டோர்களுக்கான கல்லூரி மாணவர்கள் விடுதி இயங்கி வருகிறது. அங்குத் தங்கிப் படிக்கும் மாணவர்கள் இரவு உணவு சாப்பிட்டனர். அவர்களில் 13 மாணவர்கள் வயிற்று போக்கால் பாதிக்கப்பட்டனர். | சுகாதார கேடு | |
| 46. | 08.01.2009 | **வேலூர் மாவட்டம்** வேலூர் கஸ்பா பகுதியைச் சேர்ந்தவர் துரைசாமி. இவர் தனது வீட்டின்முன்பு வடை போண்டா வியாபாரம் செய்து வருகிறார். அதே பகுதியைச் சேர்ந்தவர் தீலிப்குமார் (41). இவருக்கும் துரைசாமிக்கும் முன் விரோதம் இருந்து வந்தது. துரைசாமியின் மகள் தேன்மொழியை தீலிப்குமார் ஆபாசமாக பேசியும், தாக்கியும் ஒடிவிட்டார். இதுகுறித்து வேலூர் தெற்கு போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 47. | 08.01.2009 | **வேலூர் மாவட்டம்** பிரம்மபுரத்தை அடுத்த தாங்ககல் கிராமத்தைச் சேர்ந்தவர் அருளானந்தம். இவரது மகள் சாருலதா (15). இவர் 10 ஆம் வகுப்பு படித்து வருகிறார். இவர் தேர்வில் குறைவான மதிப்பெண் பெற்றார். தாயார் திட்டியதால் பள்ளிக்கு வீட்டைவிட்டு வெளியேறிச் சென்றவர் வீடுதிரும்பவில்லை. இதுகுறித்து காட்பாடி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 48. | 08.01.2009 | **வேலூர் மாவட்டம்** காட்பாடி குமரப்பநகரைச் சேர்ந்தவர் சாந்தி (15). இவரை குமரப்பாநகரைச் சேர்ந்த ராஜசேகர் என்ற வாலிபர் கடத்திச் சென்றதாக சாந்தியின் தாயார் காட்பாடி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 49. | 09.01.2009 | **மதுரை மாவட்டம்** வேலூர் அடுத்த அண்ணாநகர், ஒத்தக்கடை தெருவைச் சேர்ந்தவர் கோட்டீஸ்வரன். | தலித்களுக்கு எதிரான | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | இவரது மனைவி சூரியகலா (23). இவர் கீரிப்பட்டி ஊராட்சித் தலைவராக உள்ளார். இதே ஊரைச் சேர்ந்த முப்பிலியாள் (40), சந்திரன் (42) ஆகிய இருவரும் பாலுசாமியை சாதிய ரீதியாக பேசியதாக 2 பேர் மீது வழக்கு. | வன்முறை | |
| 50. | 09.01.2009 | **நெல்லை மாவட்டம்** சங்கரன்கோவில் அடுத்த புளியம்பட்டி அருகே உள்ள அய்யாபுரத்தைச் சேர்ந்தவர் முத்தையா மகள் டெய்சியான். அதே ஊரைச் சேர்ந்த ரத்தினம் மகள் ரவி காதலித்து திருமணம் செய்துக் கொண்டனர். காதல் மனைவியிடம் வரதட்சனைக் கேட்டு வற்புறுத்தியதாக ரவி கைது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 51. | 09.01.2009 | **குமரி மாவட்டம்** அழகிய பாண்டியபுரம் அருகே விடுதி மாணவர்களைத் தாக்கி அறையில் அடைத்து கொடுமைப்படுத்திய விடுதிக்காப்பாளர் சாதிக்குமார் கைது. | வகுப்பறை வன்முறை | |
| 52. | 09.01.2009 | **தஞ்சை மாவட்டம்** பாபநாசம் தாலுகா குலமங்களம் அருகில் உள்ள சந்திரபாடி கிராமம். உத்ராவதி மகள் தேவி (20). திருமணம் நடந்தது 16 வயதில். வரதட்சணைக் கேட்டுக் கொடுமைப்படுத்திய தேவி கொலை செய்யப்பட்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 53. | 09.01.2009 | **புதுவை மாநிலம்** புதுவை காலபட்டு மத்திய சிறையில் முருகன் தூக்குப் போட்டு இறந்து விட்டதாக செய்திகள். இறந்து பல மணி நேரம் ஆகியும் குடும்பத்தார்க்கு முதலில் தகவல் அளிக்காததால் சிறைத்துறையினர் மீது சந்தேகம் எழும்பியது. | சிறைச்சாலை மரணம் | |
| 54. | 09.01.2009 | **மதுரை மாவட்டம்** மதுரை நேரு நகரைச் சேர்ந்த தலைமை காவலர் சுவாமிநாதன் மனைவி சிங்கம்மாள் மகள் உமாதேவி. போலீசார் சீதாராமன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்து கொடுத்தார். இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. இந்நிலையில் தீடீரென உமாதேவி உடலில் தீப்பிடித்து இறந்துள்ளார். சீதாராமன் வேறு பெண்ணைத் திருமணம் செய்துக் கொள்வதற்காக கொலை செய்ததாக நீதிமன்றத்தில் சிங்கம்மாள் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 55. | 09.01.2009 | **கன்னியாகுமரி மாவட்டம்** சின்னவிளையைச் சேர்ந்த மெர்சியின் மகள் சகாயலதா (23). இவர் நெல்லை மனோன்மணியன் சுந்தரனார் பல்கலைகழகத்தில் எம். ஏ சமூகவியல் பயின்று வந்தார். இவர் நாகர்கோவிலில் இருக்கும் போது மேட்டுரைச் சேர்ந்த சதீஷ் என்பவரை காதலித்து வந்தார். சகாயலதாவின் பெற்றோர் கண்டித்ததால் சகாயலதா சதீஷுடன் பேச மறுத்தார். இதனால் ஆத்திரம் அடைந்த சதீஷ் மாணவி சகாயலதாவை கத்தியால் முகம் உள்ளிட்ட பல இடங்களில் குத்தினார். இதுகுறித்து பேட்டை காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 56. | 09.01.2009 | **இராமநாதபுரம் மாவட்டம்** கோவிலாங்குளத்தைச் சேர்ந்தவர் சொக்கர். இவரது மகள் ராஜீவ் காந்தி. இவருக்கும் மூன்று குழந்தைகளின் தந்தை பூபாண்டிக்கும் கள்ளக்காதல். இருவரும் ஊரைவிட்டு | பெண்களுக்கு எதிரான வன்முறை | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஓடிவிட்டனர். பின்னர் ராஜீவ் காந்தி மட்டும் வந்தார். குடும்பத்தில் நடந்ததை சொன்னதில் ராஜீவ் காந்தி தற்கொலை செய்துக் கொண்டார். | | |
| 57. | 10.01.2009 | **மதுரை மாவட்டம்** திருமங்கலம் ஒன்றிய மதிமுக செயலாளர் மாயனும் செல்லம்பட்டி ஒன்றிய மதிமுக செயலர் முனியாண்டியும் திருமங்கலம் தொகுதி ஓட்டு பதிவு குறித்து விசாரித்தனர். அப்பகுதி திமுக செயலாளர் ராமு, பூமிநாதன் மற்றும் சிலர் வெளியூர்காரன் நீ இங்கு வரக் கூடாது என்று மாயனிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதில் மாயனின் மோட்டார் சைக்கிள் சேதம் அடைந்தது. இச்சம்பவத்தில் போலீசார் தடியடி நடத்தினர். | காவல் நிலையச் சித்திரவதை. | |
| 58. | 10.01.2009 | **இராமநாதபுரம் மாவட்டம்** ரமேஸ்வரம் அருகே நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை இலங்கை கடற்படையினர் கடுமையாக தாக்கி, 4 மீனவர்கள் மீது டீசலை ஊற்றி எரித்துக் கொலை செய்ய முயன்றனர். மற்றும் மீனவர் ராஜ் என்பவரை கத்தியால் குத்தித் தாக்கியுள்ளனர். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | |
| 59. | 10.01.2009 | **காஞ்சிபுரம் மாவட்டம்** காஞ்சிபுரம் நகராட்சியில் உள்ள வரதராஜன் தெரு, நைனார் பண்ணைத் தெரு அஸ்தகிரி, அமுதப்படி, யாக சாலை மண்டபம் ஆகிய தெருக்கள் உள்பட பல்வேறு மக்களுக்கு வியாழன் இரவு முதல் தீடீர் வாந்தி பேதி. மேலும் குடிநீர் குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீர் விசத்தன்மை கலந்திருந்தால். இதில் 40 குழந்தைகள் உள்பட 300 பேர் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். | சுகாதார கேடு | |
| 60. | 10.01.2009 | **குமரி மாவட்டம்** சுசிந்திரம் கணபதியின் மகள் கலா (35). இவருக்கும் ஆத்திக்காட்டு வளையைச் சேர்ந்த ரவிச்சந்திரன் என்பவருக்கும் 14 வருடங்களுக்கு முன் திருமணம் நடந்தது. இவருக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. ரவிச்சந்திரன் இறந்துவிட்டார். அவரது தம்பி விஜயக்குமார் கலாவைத் திருமணம் செய்துக் கொண்டார். இவர்களுக்கு 3 வயது மகள் உள்ளார். விஜயகுமார் கலா வீட்டில் தூக்குப் போட்டுத் தற்கொலை செய்துக் கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை. | |
| 61. | 10.01.2009 | **திருச்சி மாவட்டம்** திருச்சிக் கோட்டை காவல் சரகத்திற்கு உட்பட்ட சிந்தாணி பூசாரித் தெருவைச் சேர்ந்தவர் சம்பத்குமார். இவர் நிழற்பட கடை வைத்துள்ளார். இவரின் மனைவி கற்பகம். இவர் திருச்சியில் உள்ள பிரபல துணிக்கடையில் வேலைப் பார்த்து வந்தார். இவர் தீடீர் என தூக்குப் போட்டு தற்கொலை செய்துக் கொண்டார். கோட்டை மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 62. | 11.01.2009 | **சிவகங்கை மாவட்டம்** காரைக்குடி இடையார் தெருவைச் சேர்ந்தவர் மணிவண்ணன் (43). இவரது முதல் மனைவி அமுதா. இவர்களுக்கு 4 குழந்தைகள். இவரது இரண்டாவது மனைவி கல்யாணி (35). கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையால் | பெண்களுக்கு எதிரான வன்முறை | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கல்யாணி தீக்குளித்தார். கல்யாணியை காப்பாற்ற முயன்ற போது மணிவண்ணனும் இறந்தார். | | |
| 63. | 11.01.2009 | **திருச்சி மாவட்டம்** பாலக்கரை வெள்ள இடர் உதவி தொகை வழங்கப்படாததால் சினமடைந்த பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். அவர்களை காவல் துறையினர் தடியடி நடத்தி விரட்டினர். | காவல் நிலையச் சித்திரவதை. | |
| 64. | 11.01.2009 | **கோவை மாவட்டம்** அன்னூர் புளியம்பட்டி சாலையில் வாழ்பவர் உழவர் பெரியசாமி (38). வங்கி கடனில் இருமுறை ஊர்தி வாங்கினார். கடனைக் கட்ட முடியாமல் தற்கொலை செய்துக் கொண்டார். | கடன் தொல்லை | |
| 65. | 11.01.2009 | **கோவை மாவட்டம்** பழனிசாமி நகரில் வாழ்ந்து வரும் 10 வயது சிறுமியை அதே பகுதியைச் சேர்ந்த குமார் (31) என்ற இளைஞர் பாலியல் வன்கொடுமை செய்தார். இதுகுறித்து செட்டிபாளையம் போலீசில் புகார். | பாலியல் பலாத்காரம். பெண்களுக்கு எதிரான வன்முறை. | |
| 66. | 11.01.2009 | **நெல்லை மாவட்டம்** கொக்கிரகுளம் நேதாஜி சாலையைச் சேர்ந்தவர் மாரியப்பன். காவலரான இவர் பெருமாள்புரம் காவல் நிலையத்தில் வேலை செய்து வருகிறார். இவர் தன் மனைவி வெல்ரோஜ் அமலராணியைக் கொடுமைப்படுத்தியதாக வள்ளியூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 67. | 12.01.2009 | **மதுரை மாவட்டம்** விக்கரமங்கலம் அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர்கள் படிக்க சிரமப்படுகிள்றனர். | வகுப்பறை வன்முறை | |
| 68. | 12.01.2009 | **கோவை மாவட்டம்** மேட்டுப்பாளையம் பகுதியைச் சேர்ந்தவர் பாபுக்குமார் (35). டீக்கடை நடத்தி வருகிறார். இவரது மனைவி ப்ரியா (18). திருமணத்தின் போது 10 பவுன் நயையும் 10 ஆயிரமும் வரதட்சணைக் கேட்டு சித்திரவதை செய்ததாக மேட்டுப்பாளையம் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 69. | 12.01.2009 | **குமரி மாவட்டம்** நாகர்கோவில் அருகே ஈத்தா மொழி சுரேஷ் சொத்துவிளையில் உள்ள இளம்பெண்ணை ஒருவரைக் கடத்தி பாலியல் வன்கொடுமை செய்தவர் என்பதால் மேற்கண்ட இருவரையும் காவலர் குண்டர் சட்டத்தில் கைது செய்தனர். | பாலியல் பலாத்காரம். பெண்களுக்கு எதிரான வன்முறை. | |
| 70. | 12.01.2009 | **தேனி மாவட்டம்** தனிப்பிரிவு காவல் துறையினர் முதன்மை சாலையில் சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தார்கள். மணல் கடத்தலுக்கு பயன்படுத்திய இழுவை ஊர்தியை ஆர். டி. ஓ பறிமுதல் செய்தார். | மணல் கடத்தல் | |
| 71. | 12.01.2009 | **மதுரை மாவட்டம்** மகபூப்பாளையம் சிங்காரப்புரமத்தைச் சேர்ந்த கணபதி மகன் குமார் (எ) தேவ ஆசிர்வாதம் (30). இவர் தன் மனைவி கார்த்திகாவை வரதட்சணைக் கேட்டு மண்ணெண்ணெய் கார்த்திகா மீது ஊற்றி தீவைத்துக் கொல்ல முயன்றதாக செல்லூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 72. | 12.01.2009 | **தர்மபுரி மாவட்டம்** பாலக்கோட்டை அடுத்த தீர்த்தாரப்பட்டி கிராமத்தில் வசித்து வருபவர் தலித் சமூகத்தச் சேர்ந்த ஆனந்தன். இவருக்கும் அப்பகுதியில் உள்ள சிலருக்கும் முன் விரோதத்தின் காரணமாக ஆனந்தனை ஊரை விட்டு ஒதுக்கி வைத்தனர். இதுகுறித்து எஸ். பி. நஞ்மல் ஹோடாவிடம் புகார். | சமூகப் புறக்கணிப்பு மற்றும் தலித்களுக்கு எதிரான வன்முறை | |
| 73. | 12.01.2009 | **மதுரை மாவட்டம்** தேசிய வங்கியில் மேலாளராக இருந்தவர் தட்சிணாமூர்த்தி. இவரை தண்டனை கைதியான சாமி என்பவர் கத்தியால் குத்தினார். இதுகுறித்து சிறைத்துறை போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். | சிறைச்சாலை வன்முறை | |
| 74. | 13.01.2009 | **சிவகங்கை மாவட்டம்** இளையான்குடி பஸ் நிலையம் அருகே உள்ள தெய்புஸ்பகரனை ஊரணி. இந்த ஊரணியில் நேற்று ஒரு பெண் சிசு இறந்துக் கிடந்தது. இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். | பெண் சிசு கொலை | |
| 75. | 13.01.2009 | **குமரி மாவட்டம்** நாகர்கோவில் புத்தேரியில் பெரியகுள் மேலகலூங்குடி பகுதியில் சுமார் 40 தலித் குடும்பத்தினர். தலைமுறையாக வாழ்ந்து வருகின்றனர். அப்பகுதியில் வசிக்கும் செந்தூரன் என்பவரின் வீட்டை இடிக்கப் போவதாக அரசு நோட்டிஸ் வந்தவுடன் இவரத மனைவி சம்பவ இடத்திலேயே இறந்தார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 76. | 13.01.2009 | **தேனி மாவட்டம்** தாமரைக்குளம் அறிஞர் அண்ணாத் தெருவைச் சேர்ந்தவர் சக்திவேல் (41). இவன் சகோதரர்கள் கோவிந்தன், மணிகண்டன் (எ) கிருட்டினன், நாகராசன் ஆகியோர் சக்திவேலி வேலைக்குச் சென்ற போது அவரின் மனைவி செந்தில் வடிவிடம் தகராறு செய்துள்ளனர். இதுகுறித்து பெரியகுளம் காவல் நிலையத்தில் புகார் செய்தும் உரிய நடவடிக்கை எடுக்க வில்லை. இது சினமடைந்த சக்திவேலின் சகோதரர்கள் மற்றும் அவர்களின் மனைவிகள் சேர்ந்து செந்தில் வடிவின் முடியை வெட்டி சாணத்தைக் கரைத்து ஊற்றியுள்ளனர். இதுகுறித்து பெரியகுளம் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 77. | 14.01.2009 | **மதுரை மாவட்டம்** சிலைமான் கணேஷ் நகரைச் சேர்ந்தவர் நீதி (35). கூலித் தொழிலாளி. இவரது மனைவி செல்வி (28). இவர்களுக்கு 2 மகன்கள். கணவன் மனைவியிடையே ஏற்பட்ட குடும்பத்தகராறில் நீதி தன் மனைவி செல்வியை வெட்டிக் கொலை செய்தார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 78. | 14.01.2009 | **மதுரை மாவட்டம்** சோழவந்தான் அருகே ராட்சத குடிநீர் குழாய்கள் சரிந்ததில் 3 சிறுவர்கள் செந்தில் குமார், சிவக்குமார் மீது விழுந்ததில் மூவருக்கும் பலத்த காயங்கள். இது குறித்து காடுபட்டி போலீசில் புகார். | | |
| 79. | 14.01.2009 | **மதுரை மாவட்டம்** சாலையைச் சேர்ந்த குணசேகரன் தனியார் நிறுவனத்தில் தவணைக்கு | பெண்களுக்கு எதிரான | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கடன் பெற்றார். தவணைத் தொகையை 30,000 ஐ ஷர்மியளா வசூல் செய்ய வந்த போது இருவருக்குள் தகராறு ஏற்பட்டதில் குணசேகரன் ஷர்மிளாவை தாக்கியுள்ளார். இதுகுறித்து எஸ். எஸ். காலனி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | வன்முறை | |
| 80. | 14.01.2009 | **திண்டுக்கல் மாவட்டம்** கொடைக்கானல் மலைப்பகுதியில் வசிக்கும் பனியர் இன ஆதிவாசிகள் அடிப்படை வசதியின்றி இவர்கள் அல்லல்பட்டு வருகின்றனர். அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பலரும் வலியுறுத்துகிள்றனர். | தலித்துகள் மீதான வன்முறை | |
| 81. | 14.01.2009 | **திருவள்ளுவர் மாவட்டம்** பூந்தமல்லி வட்டம் நேமம் நியாய விலை கடையில் சனியன்று திருவள்ளுவர் மாவட்ட வழங்கல் அலுவலர் தணிக்கை மேற்கண்டதில் கடையின் விற்பனையின் போது முறைகேடு நடந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது. | ரேசன் கடை ஊழல் | |
| 82. | 14.01.2009 | **வேலூர் மாவட்டம்** குடியாத்தம் தங்கம் நகரைச் சேர்ந்தவர் பழனி (30). ஆட்டோ டிரைவர். இவருக்கும் காட்பாடி செங்குட்டையைச் சேர்ந்த உமா மகேஸ்வரிக்கும் திருமணம் நடந்து இரண்டுக் குழந்தைகள். பழனி வரதட்ணைக் கேட்டு உமா மகேஸ்வரியை துன்புறுத்தியுள்ளார் இருவரும் பிரிந்து வாழ்கின்றனர், இந்நிலையில் உமா மகேஸ்வரி பன்னீர்செல்வத்துடன் சேர்ந்து வாழ்ந்தார். இதில் இவர்களுக்கு இடையே ஏற்பட்ட பிரச்சனையில் பன்னீர் செல்வம் உமா மகேஸ்வரியை மண்ணெண்ணெய் ஊற்றிக் கொல்ல முயன்றுள்ளார். இதுகுறித்து காட்பாடி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 83. | 14.01.2009 | **வேலூர் மாவட்டம்** மேல்பாடி அருகே உள்ள குப்புரெட்டியூரைச் சேர்ந்த நாராயணசாமி மகள் கவிதா (16). தூங்கிக் கொண்டிருந்த இவரை இடையகுப்பம் எனும் கிராமத்தைச் சேர்ந்த பாலமுருகன் (20) வாலிபர் மாணவியை கடத்தி சென்றதாக மேல்பாடி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 84. | 14.01.2009 | **திருவண்ணாமலை மாவட்டம்** தி. மலை அடுத்த பெரிய பாலியப்பட்டு கிராமத்தைச் சேர்ந்தவர் விஜயராஜ் (40). இவரது மனைவி கலா (38). இவர்களுக்கு திருமணமாகி 20 வருடங்கள் ஆகிறது. விஜயராஜ் அதே ஊரைச் சேர்ந்த நிர்மலா (35) எனற பெண்ணுடன் கள்ளத் தொடர்பு வைத்ததை தட்டிக் கேட்ட மனைவி சரமாரியாக தாக்கினார். இதுகுறித்து திருவண்ணாமலை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 85. | 14.01.2009 | **திருவாரூர் மாவட்டம்** முத்துபேட்டை அருகே ஜாம்புவானோடையைச் சேர்ந்தவர் மணிகண்டன். +2 மாணவர்கள் இடையே நடந்த மோதல் தொடர்பாக மணிகண்டன் உட்பட 6 மாணவர்கள் சஸ்பெண்ட் | வகுப்பறை வன்முறை | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்யப்பட்டார். இதனால் மனமுடைந்த மணிகண்டன் விஷம் குடித்து தற்கொலை. இதுதொடர்பாக 3 ஆசிரியர்கள் அதிரடி மாற்றம். | | |
| 86. | 14.01.2009 | **திருவண்ணாமலை மாவட்டம்** செய்யாறு அடுத்த சித்தாத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர் கந்தவேல் கட்டிட தொழிலாளர். இவரது மனைவி தேவி. கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையில் தேவி தற்கொலை செய்துக் கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 87. | 14.01.2009 | **திருவண்ணாமலை மாவட்டம்** செய்யாறு அடுத்த பெருங்காட்டூர் கிராமத்தைச் சேர்ந்தவர் நடவராஜன். இவர் அங்குள்ள கோவில் ஒன்றில் குருக்களாக உள்ளார். இவரது மகள் தாராணி (15). தேர்வில் குறைவான மதிப்பெண் பெற்றதால் தந்தை திட்டியுள்ளார். இதனால் தாரணி தீக்குளித்து தற்கொலை செய்துக் கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 88. | 14.01.2009 | **திருவண்ணாமலை மாவட்டம்** ஆரணி அடுத்த ஒன்டிகுடிசை கிராமத்தைச் சேர்ந்த சேட்டுவின் மகள் ஜெயந்தி (19). இவருக்கும் ஜெகநாதன் (27) என்பவருக்கும் கடந்த 3 ஆண்டுகளுககு முன்பு திருமணம் நடந்தது. ஜெகநாதன் உடல் நிலை பாதிக்கப்பட்டு இறந்தார். ஜெகநாதனின் பெற்றோர் ஜெயந்திக்கு இரண்டாம் திருமணம் செய்ய ஏற்பாடு செய்வது பிடிக்காததால் ஜெயந்தி தற்கொலை செய்துக் கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 89. | 16.01.2009 | **புதுக்கோட்டை மாவட்டம்** பொன்னமராவதி அருகே கொன்னைப்பட்டி கொப்பனாப்பட்டி என்ற இரண்டு கிராமங்களிலும் பொங்கல் தினத்தை முன்னிட்டு ஜல்லிகட்டு நடத்துவதில் இரண்து கிராமத்தினருக்கும் மோதல். போலீசார் துப்பாக்கி சூடு நடத்தினர். | காவல் நிலையச் சித்திரவதை. | |
| 90. | 16.01.2009 | **திண்டுக்கல் மாவட்டம்** பழனி ஒன்றியம் ஏ. கலையம்புதூர் அழகாபுரியில் வசிப்பவர் மோகன ராஜ். இவர் அதே ஊரைச் சேர்ந்த நந்தினி என்பவரை கடந்த 3 வருடமாக காதலித்து திருமணம் செய்தாக சொல்லி ஏமாற்றிவிட்டார். 4 மாத கர்ப்பத்தை கலைத்து விட்டார். இதுகுறித்து நந்தினி பழனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். மோகன்ராஜ் புகாரை வாபஸ் வாங்குமாறு கூறி நந்தினியின் வயிற்றில் கத்தியால் குத்தியுள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 91. | 16.01.2009 | **நாகை மாவட்டம்** கழவலுவர் அருகே புலியூா கிராமத்தைல் திமுக கட்சியைச் சேர்ந்தவர்கள் அங்குள்ள தலித் சமூகத்தைச் சேர்ந்த மக்களின் வீடு மற்றும் வீட்டு சாமான்களை உடைத்துள்ளனர். இந்த தாக்குதலில் 2 பெண்கள் உட்பட 9 பேர் காயமடைந்தனர். | தலித்களுக்கு எதிரான வன்முறை | |
| 92. | 16.01.2009 | **குமரி மாவட்டம்** நித்திரவிளையை தேவதாசின் மனைவி ரத்தினம் இவர். அங்குள்ள நியாய விலைக் கடைக்குச் சென்று விட்டு வந்தார். அப்போது அதே பகுதியைச் சேர்ந்த சவேரியனர் அடிமை என்பவர் | பெண்களுக்கு எதிரான வன்முறை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவரை தகாத சொற்களால் பேசி தாக்கியுள்ளார். இதுகுறித்து நித்திர விளைக் காவல் நிலையத்தில் புகார். | | |
| 93. | 16.01.2009 | **மதுரை மாவட்டம்** மதுரை அருகே உள்ள பறையன் குளத்தைச் சேர்ந்தவர் அய்யனார் (50). சரக்குந்து ஓட்டுனர். இவருக்கு 3 பெண் குழந்தைகள் உள்ளன. மூன்றும் பெண் குழந்தைகளாக பிறந்ததால் அய்யனார் மூன்றாவது பெண் குழந்தை தர்சினி(1 1/2) மீது கல்லைப் போட்டு கொலை செய்தார் | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 94. | 16.01.2009 | **குமரி மாவட்டம்** மார்த்தாண்டம் அருகே இவலு வளையைச் சேர்ந்தவர் குமார் (34). இவர் சென்னை ஆயுதப்படையில் காவலராக் பணியாற்றுகிறார். இவர் குடிபோதையில் அப்பகுதியில் உள்ள அபோன்சு என்பவரின் கடையோடு அதன் உரிமையாளர் அல்போன்சு சேர்த்து மண்ணெண்ணெய் ஊற்றி எரித்து கொல்ல முயன்றர். இதுகுறித்து மார்தாண்டம் போலீசில் புகார். | காவல் நிலையச் சித்திரவதை. | |
| 95. | 16.01.2009 | **தூத்துக்குடி மாவட்டம்** தூத்துக்குடி எழில் நகரைச் சேர்ந்தவர் தனசேகரன் (54). இவரின் மனைவி ரோசம்மாள் (48). கடன் தொல்லை தாங்காமல் தனசேகரன் விஷம் குடித்து தற்கொலை செய்துக் கொண்டார். | கந்து வட்டிக் கொடுமை | |
| 96. | 16.01.2009 | **நெல்லை மாவட்டம்** சிவகிரி வட்டத்தைச் சேர்ந்த செல்வம் மற்றும் அவரது மனைவி ---- இருவரையும் கரிவலம் வந்த நல்லூர் காவல் நிலைய காவலர்களால் சித்திரவதை செய்யப்பட்டார்கள். | காவல் நிலையச் சித்திரவதை. | |
| 97. | 16.01.2009 | **சிவகங்கை மாவட்டம்** திருப்பத்தூர் வட்டம், சிமம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 5 ஆம் வகுப்பு தலித் மாணவியை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சி. | தலித்களுக்கு எதிரான வன்முறை | |
| 98. | 16.01.2009 | **திருவண்ணாமலை மாவட்டம்** திருவண்ணாமலை அடுத்த சாத்தனூர் செட்டித் தெருவைச் சேர்ந்தவர் ராஜா (36). இவர் சாத்தனூர் அணை ஓட்டல் நடத்தி வருகிறார். திருவண்ணாமலையைச் சேர்ந்த பாக்கியராஜ் உட்பட 7 பேர் சேர்ந்து ஓட்டலில் மட்டன் குழம்பு வைக்காததால் ராஜா மற்றும் அவரது மனைவி அனிதாவை தாக்கிய சம்பவம். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 99. | 16.01.2009 | **விழுப்புரம் மாவட்டம்** விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே நாரணமங்கம் கூட்டு ரோட்டில் 25 வயது மதிக்கத்தக்க ஒரு பெண்ணின் பிணம் தலை மற்றும் கை, கால்கள், இல்லாமல் கிடந்தது. இதுத் தொடர்பாக விழுப்புரம், எஸ்.பி அமல்ராஜ் திருவண்ணாமலை எஸ். பி பாலகிருஷ்ணன் செஞ்சி டி.எஸ்.பி ஆகியோர் சேர்ந்து விசாரித்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 100. | 16.01.2009 | **கரூர் மாவட்டம்** ஆத்தூர் பெரிய வடுகப்பட்டியைச் சேர்ந்தவர் செல்வகுமார் (42). டெகஸ்டைல் நிறுவனம் நடத்தி வருகிறார். இவர் துப்பாக்கி உரிமத்தை புதுபிக்க கரூர் டி. ஆர். ஓ ஜவகர் சாந்தகுமாரை அணுகினார். உரிமைத்தை புதுப்பிக்க 6 ஆயிரம் ரூபாய் | லஞ்சம் | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | லஞ்சம் கேட்டார். லஞ்சம் ஒழிப்பு போலீசாரால் ஜவகர் கைது செய்யப்பட்டார். | | |
| 101. | 16.01.2009 | **திருவண்ணாமலை மாவட்டம்** கலசபாக்கம் அடுத்த முத்தரசம்பூண்டி கிராமத்தைச் சேர்ந்தவர் காமராஜ். இவரது மனைவி அபிராமி. இவர்களுக்கு அர்ச்சுனா (3) மற்றும் இரண்டு மாத பெண் குழந்தையும் உள்ளன. இரண்டு குழந்தைகளுக்கும் தடுப்பூசி மற்றும் போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்பட்டது. தடுப்பூசி போடபட்ட குழந்தை தீடீரென இறந்து கிடந்தது. | மருத்துவர் அலட்சியம் | |
| 102. | 16.01.2009 | **சிவகங்கை மாவட்டம்** சிவகங்கை அருகே உள்ள சித்தலூர் அரசு உயர் நிலைப்பள்ளியில் சத்துணவு சாப்பிட்ட 33 மாணவ, மாணவிகளுக்கு வாந்தி மயக்கம் ஏற்ப சிவகங்கை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டன. | வகுப்பறை வன்முறை. | |
| 103. | 16.01.2009 | **சிவகங்கை மாவட்டம்** சிவகங்கை தொகுதி இந்தி கம்யூனிஸ்ட் எம். எல். ஏ குணசேகரன். இவரது உறவினர் திருமணம் மானாமதுரையில் நடந்தது. எம். எல் .ஏ வின் மகன் ஸ்டாலின் இளங்கதிரை ரோந்து வந்த மானாமதுரை போலீசார் அடித்துச் சித்திரவதை. | காவல் நிலையச் சித்திரவதை. | |
| 104. | 17.01.2009 | **மதுரை மாவட்டம்** எழுமலை அருகே உத்தப்புரத்தில் தலித் பிரிவினருக்கும் பிள்ளைமார் பிரிவனருக்கும் இடையே சாமி கும்பிடுவதில் பிரச்சனை ஏற்பட்டு இருதரப்பிரும் கல்வீச்சி மோதிக் கொண்டனர். | தலித்களுக்கு எதிரான வன்முறை | |
| 105. | 17.01.2009 | **மதுரை மாவட்டம்** மதுரைக்கு வரும் வெளிமாநில பக்தர்களிடம் போக்குவரத்து போலீசார் அடாவடி வசூலில் ஈடுபடுவதாக புகார் எழுந்துள்ளது. ஆனால் எழுத்துப் பூர்வமாக புகார் அளிக்காததால் நடவடிக்கை எடுக்க முடியாது என போலீஸ் அதிகாரிகள் கூறுகின்றனர். | காவல் நிலையச் சித்திரவதை. | |
| 106. | 17.01.2009 | **திருநெல்வேலி மாவட்டம்** நெல்லை அரசு விரைவுபோக்குவரத்து கழக நிர்வாகத்தின் அடக்குமுறை தாங்காமல் நடத்துனர் சுப்புராஜ் தற்கொலை செய்துக் கொண்டார். | அடக்குமுறை | |
| 107. | 17.01.2009 | **தூத்துக்குடி மாவட்டம்** பிரையண்ட் நகர் 12 வது தெருவைச் சேர்ந்த ஓட்டுநர் நாகராசு (26). இவருக்கும் தூத்துக்குடி அருகே புதுக்கோட்டையைச் சேர்ந்த அமுதா (24). திருமணம் நடந்தது. திருமணத்தின் போது அமுதாவின் பெற்றோர் 25 பவுண் நகை பணம் மற்றும் சீர் செய்தார்கள். நாகராசு மற்றும் அவரது குடும்பத்தினர் மேலும் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தி வந்துள்ளார். இதனால் மனமுடைந்த அமுதா மண்ணெண்ணெய் உடலில் ஊற்றி தற்கொலை செய்துக் கொண்டார். இதுகுறித்து தூத்துக்குடி தென்பாகம் காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 108. | 17.01.2009 | **இராமநாதபுரம் மாவட்டம்** கமுதி அருகே மேலமுடிமன்னார் கோட்டையைச் சேர்ந்தவர் முருகன் (35). இவரது மனைவி முத்துலட்சுமி (31). இந்நிலையில் | பெண்களுக்கு எதிரான வன்முறை | |

மக்கள் கண்காணிப்பகம்

